உ

கடவுள் துணை

# செந்தமிழ்

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும் வெளிவரும்

ஒரு தமிழ்ப்பத்திரிகை

"எனைத்தானும் நல்லவை கேட்க வனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி-௫௧.] ஜய ௵—தை ௴ [பகுதி-௩.

Vol. 51. January-February—1955. No. 3.

## உள்ளுறை


| | | |
|---|---|---|
| இலக்கிய வுண்மை | திரு. ஒளவை. சு. துரைசாமிப்பிள்ளை அவர்கள் | 65—73 |
| காஞ்சி-கயிலாசநாதர் கோவில் | திரு. மா. இராசமாணிக்கனார் அவர்கள் | 74—79 |
| இயற்கையைப் பயன் படுத்துதல் 2. சூரியன் | திரு. பெ. நா. அப்புஸ்வாமி ஐயர் அவர்கள், B.A., B. L. | 80—85 |
| திருவள்ளுவர் கால வாழ்க்கை நிலை | வித்துவான் திரு. சு. குமாரஸ்வாமி ஆச்சாரி அவர்கள், M. A. | 86—93 |
| மதிப்புரை—பத்திராசிரியர் | | 94—95 |
| அநுதாபக் குறிப்பு—,, | | 96 |


பத்திராசிரியர்—திரு, நா. அப்பனையங்கார்.

வருஷம் ஒன்றுக்கு ரூ. 4.] [தனிப்பிரதி அணா—8.

வெளிநாடுகளுக்கு ரூ. 4—8—0.

1955.

Printed by Srimathu R. Shanmuga Rajeswara Naganatha Sethupathy Avl., and Published by T. N Appan Iyengar at the Tamil Sangam Power Press, No. 54, Tamil Sangam Road, Madura.

உ

# ஒரு வேண்டுகோள்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதமொருமுறை வெளிவரும் இச்செந்தமிழ்ப்பத்திரிகையில் வெளியிடுமாறு பொருளுரைகளும் மதிப்புரைவேண்டிப் புத்தகம் முதலியனவும் அனுப்புவோர் அவற்றைப் பத்திராசிரியர், செந்தமிழ், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும்,

செந்தமிழில் வெளியிடுமாறு அனுப்பும் விளம்பரங்களையும், பாண்டியன்புத்தகசாலைக்கு நன்கொடையாக அனுப்பும் புத்தகம் முதலியவைகளையும், செந்தமிழ் செந்தமிழ்ப்பிரசுரங்கள் தமிழ்ச்சங்கப் பிரசுரங்கள் சங்கக்கலாசாலை சங்கப்பரீக்ஷைகள் முதலியவை சம்பந்தமாக அனுப்பும் கடிதங்கள் மணியார்டர்கள் முதலியவற்றையும், இன்னும் இச்சங்கசம்பந்தமாயறியவிரும்பியெழுதும் பிறவற்றையும் மானேஜர், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும் அனுப்புமாறு இதன்மூலம் கேட்டுக்கொள்ளலாயிற்று.

S. சிவஸ்வாமி,

மானேஜர்.

உ

கடவுள் துணை


# செந்தமிழ்

தொகுதி—ருக.] ஜய௵—தை௴ [பகுதி—௩.

Vol. 51. January—February-1955. No. 3.


## இலக்கிய வுண்மை


சித்தாந்த கலாநிதி பேராசிரியர், ஔவை, சு. துரைசாமிப் பிள்ளை, மதுரை.


மக்கள் வழக்கில், அவருடைய நினைவு சொல் செயல் என்ற மூன்றையும் நிலைக்களமாகக் கொண்டே உண்மையும் பொய்ம்மையும் நிலவுகின்றன. நினைவு முதலிய மூன்றும் உலகியற் பொருள்களை அடிப்படையாகக் கொண்டு நிற்பன. ஆதலால் உண்மையும் பொய்ம்மையும் உலகியலோடு தொடர்புற்று இருப்பது தெளிவாகும். ஒருபொருள் உளதாகுங்கால் உண்மையும், அவ்வாறு ஆகாது மறையுங்கால் பொய்ம்மையும் தோற்றம் பெறுகின்றன. உள்ளது ஒன்றன் உண்மையைப் பிறர் சொல்லக் கேட்பவன் அதனை நேரிற் சென்று காணும் போது அப் பொருள் மறைந்தொழியின் அதன் இன்மையால் முன்னர்க் கேள்வியுற்ற உண்மை பொய்யாகி அவனை மயக்குகிறது. அதனை மேற்கொண்டு ஆராய்ந்து காணுவழி அவனுக்கு அது பொய்யாகவே அமைந்து விடுகிறது. இவ் வண்ணமே நினைவும் நிகழ்ச்சியும் ஒன்றாவிடத்தும், சொல்லும் செயலும் ஒவ்வாவிடத்தும், செயலும் பொருளும் (பயனும்) சிறவாவிடத்தும் பொய்ம்மை உருக்கொள்ளுகிறது. ஆராய்ச்சியால் பொய்ம்மை நீங்குவதும், உண்மை ஒளிவிட்டுத் தோன்றி இன்பம் செய்வதும் மக்களுலகில் நாடோறும் நிகழும் நிகழ்ச்சிகளாகும்.

உண்மையாராய்ச்சியில் தலைப்பட்டோர் உண்மைகளை விஞ்ஞான வுண்மை (Scientific Truth), வரலாற்று உண்மை (Historical) Truth), மெய்ந்நெறியுண்மை (Philosophical Truth), புலனெறி யுண்மை (Poetic Truth) என நான்கு வகையாகக் கண்டு உரைத் துள்ளனர்.

இரண்டோடு மூன்றைக் கூட்டினால் ஐந்தாகும் என்பது போல்வனவும், இருபங்கு நீர்க் காற்றும் ஒருபங்கு நெருப்புக் காற்றும் சேர்ந்தால் நீர் உண்டாகும் என்பது போல்வனவும் விஞ்ஞான வுண்மை; நமது தமிழகத்தைச் சில ஆண்டுகட்கு முன்னர் மேனாட்டு ஆங்கிலரும், அவர்க்குமுன் நாயக்க முகமதிய மன்னர்களும், அவர்கட்கு முன்னே பாண்டிய சோழ மன்னர்களும், அவர்க்கு முன்பு பல்லவரும் ஆட்சிபுரிந்தனர் என்பது போல்வன வரலாற்றுண்மை; உலகியற் பொருள்களைக் கண் முதலிப கருவிகளால் அறிந்தபின் அறிந்தவற்றை ஆராய்ந்து முடிபு செய்வதற்கு மன முதலிய கருவி கள் நமக்கு உண்டு என்பதும் அவற்றை நெறிப்படுத்தும் கருவி யாக அறிவு என்பது உண்டு என்பதும் இவை போல்வன பிறவும் மெய்ந்நெறி உண்மைகளாகும். "சுவை யொளி யூறு ஓசை நாற் நாற்றம் என்றைந்தின் வகைதெரிவான் கட்டே உலகு" என்பதும் அது. கண் முதலிய கருவிகளால் புறத்தே கண்ட பொருள்களை மனத்தின்கண் நிறுத்தி அவற்றைக் கூட்டியும் கழித்தும் வகுத்தும் மீட்டும் சொல்வடிவில் வெளிப்படுத்திக் கேட்போர் உள்ளத்தில் தன் மனத்திற்கண்ட காட்சி யெழுமாறு செய்யும் புலனெறி வழக்கில் காணப்படும் பொருளும் செய்கையும் புலனெறி யுண்மையாகும்.

மூத்து நரைத்த முதியவள் ஒருத்தி தன்மகன் யானையோடு போராடி அதனைக் கொன்றுவிட்டுத் தானும் மடிந்தான் என்று கேள்விப்பட்டு, யானையைக் கொன்றதுபற்றி உவகையும் மடிந்தது பற்றித் துயரும் கொண்டு கண்ணீர் வடிக்கின்றாள். அதனைப் புலவ னொருவன் நமக்கு உரைக்கின்றான். முதியவளது முதுமை நிலையை

"மீனுண் கொக்கின் தூவியன்ன, வால்நரைக் கூந்தல் முதியோள்" என்றும், அவள் மகன் யானையைக் கொன்று தானும் இறந்தானெனக் கேள்வியுற்றதை "முதியோள் சிறுவன் களிறு எறிந்து பட்டனன் என்னும்" என்றும், அவள் சொரிந்த கண்ணீரைக் "கண்ணீர், நோன்கழைத் துயல்வரும் வெதிரத்து, வான் பெயத் தூங்கிய சிதரினும் பலவே" என்றும் உரைத்து, யானையொடு போராடிய மகன் அப் போரில் யானையைக் கொன்று வென்றி எய்தியதனால் உவகைக் கண்ணீர் சொரிந்ததை, "களிறு எறிந்து பட்டனன் என்னும் உவகை, ஈன்ற ஞான்றினும் பெரிதே" என்றும், "கண்ணீர் வெதிரத்துச் சிதரினும் பலவே" என்றும் கூறியதுபோல் வன புலனெறி யுண்மைகளாம். "வானத்திற் பறக்கலாம், எந்திர வூர்தி இயற்றுமின் என்றான்", கடற்குள் மூழ்கிச் சென்றான். நீர் மேல் நடக்கலாம் என்றெல்லாம் புலமைக் கண்ணில் தோன்றிய காட்சிகள் இந்நாளில் நம் கண்முன்னே நிகழ்தலால், அவையும் எதிரது போற்றி மக்களுலகின் மாட்சி தெரிக்கும் புலனெறி யுண்மை வகையேயாம்.

இவ் வுண்மைகளை ஆராய்வது நாட்டு நலனுக்கும் மக்கள் வாழ்வுக்கும் பெருத்த நன்மையாகும். விஞ்ஞான வுண்மை ஆராய்ச்சியால் நாட்டின் பொருளியல் வாழ்வு ஆக்கம் பெறுகிறது. மேனாடுகளிற் பலவும் அமரிக்க நாடும் இன்று பொருள் வாழ்வு சிறந்து பொலிவதே இதற்குப் போதிய சான்று. வரலாற் றாராய்ச்சியால் அரசியல் வாழ்வு திட்பமும் செம்மையும் அடைகிறது. ஆங்கில நாட்டு அரசியற் பாராளுமன்ற முறை உலகிலுள்ள ஏனை நாடுகட்கு எடுத்துக் காட்டாக இலங்குவது ஆங்கில மக்களின் வரலாற் றாராய்ச்சியால் விளைந்த பெரும் பயன். மெய்ந்நெறி யாராய்ச்சி, விதிவிலக்கு, நீதி, நேர்மை முதலிய கூறுகள் வளம்பெற்று நாட்டில் அமைதியும் அறமும் பொருந்திய வாழ்வு நிலவுதற்குத் துணை செய்கின்றது. முன்னாளில் சிறந்து விளங்கிய யவனநாட்டு மெய்ந்நெறிப்

புலவர்கள் செய்த அறிவுப்பணியால் இன்றைய அரசியல் சட்டங்கள் உருவாய் அமைந்திருப்பதை இதற்கு எடுத்துக் கூறலாம். இன்றும் சட்டக்கல்வி கற்பிக்கும் கல்விநிலையங்கள் யவனநாட்டுச் சட்டங்களை நம்நாட்டு இளைஞர்கட்குக் கற்பித்து வருவது இதனை நன்கு வற்புறுத்துகிறது. இறுதியாக நிற்கும் புலனெறி யுண்மை ஆராய்ச்சி மக்களை ஏனைய விலங்கு முதலிய மாக்களின் இனத்தினின்று பிரித்து மக்கட்பண்பை வளர்த்து, அறிவு, அறம், அன்பு ஆகியவற்றின் வாயிலாகக் கண்ணுக்கு அழகும் கருத்துக்கு இன்பமும் பெருகும் இம்மை வாழ்வும் அம்மையிற் பெறலாகும் அந்தமில் இன்பத்து அழியாப் பேரின்ப வாழ்வும் கைவரச்செய்யும் கவின்வாய்ந்ததாகும். நாளும் வளர்ந்து வரும் மக்களினத்துக்கு வேண்டுவன வற்றை உணர்த்தி வேண்டாதவற்றை விலக்கி, நேரிய நினைவும் சீரிய நடையும் உடையதாக ஆங்கிலமக்கட் சமுதாயத்தைச் செய்தது இப் புலனெறி யுண்மை ஆராய்ச்சியே. இத்துணை நலங்கள் இந்த உண்மையாராய்ச்சியில் இருப்பது கண்டே நாகரிகம் படைத்த நாட்டினர் அனைவரும் இவற்றை மிகவிரும்பிக் கையாண்டு வருகின்றனர். நம்நாட்டு அரசியலும் இத்துறையில் கருத்துச் செலுத்தி வருவதை நாம் நாளும் கண்டு வருகின்றோம்

இவ் வுண்மையாராய்ச்சி பொதுவகையில் நான்கு பெரும் பிரிவாகக் காணப்பட்டதாயினும் அவ் வகைகள் ஒன்றுக்கொன்று தொடர்பின்றித் தனித்து இயங்குவதில்லை. ஒன்றையொன்று இன்றியமையாது சார்ந்துவரும் முறைமை இவற்றிடையே விளங்கித் தோன்றுகிறது. விஞ்ஞானத்துறையில் ஒருகாலத்திற் காணப்பட்ட வுண்மை பிறிதொரு காலத்தில் தொடர்பாக ஆராய்ச்சி செய்யப் பெற்று விளக்கம் பெறுவதோடு மேலும் பல உண்மைகளைக் காட்டியமைகிறது. புகைவண்டி முதல்முதலாகத் தந்த தோற்றமும் இன்று தரும் தோற்றமும் தம்முள் வேற்றுமை பெரிதும் கொண்டுள்ளன. விஞ்ஞான உண்மை காணும் ஆராய்ச்சி வழிவழியாகத் தொடர்ந்து

நடந்ததே இதற்குக் காரணம். இன்றையதோற்றத்தில் காணப்படும் வேற்றுமைக் கூறுகள், தோன்றிய காலத்துக் கூறுகளோடு ஒப்ப வைத்து நோக்கின், அதன்கண் வரலாற்றுண்மை உள்ளீடாக நிற்ப தைக் காணலாம். ஏனை மெய்ந்நெறித் துறையிலும் பிறவற்றிலும் வரலாறு உள்ளுற நிற்பதும், வரலாற்றுண்மை ஆராய்ச்சியில் விஞ் ஞானம், மெய்ந்நெறி முதலியவற்றின் உண்மை கலந்திருப்பதும் ஆராய்பவர்க்குத் தெளிவாகத் தெரிகின்றன.

இயற்கையும் செயற்கையுமாகிய எல்லாப் பொருட்கும் அகக் கூறும் புறக்கூறும் காண்பது உண்மை யாராய்ச்சிக்கு உருவாகும். அக் கூறுகளில் தோய்ந்திருக்கும் உண்மைகளை மேலே கூறிய விஞ் ஞானம் வரலாறு மெய்ந்நெறி ஆகிய துறைகள் ஆராய்ந்து வெளிப் படுத்தா நிற்ப, புலநெறி யுண்மையாராய்ச்சி அவ் விருவகைக் கூறு களின் அமைப்பிடையே நிலவும் அழகையும் பொற்பையும் வெளிப் படுத்தி உள்ளத்துக்கு இன்பத்தையும் அமைதியையும் நல்குகிறது. உலகிலுள்ள மக்களினம் எல்லாவற்றிற்கும் அகக் கூறுகளில் ஒற் றுமை காணப்படினும் புறக்கூறுகளாகிய தோற்றம், நிறம், வடிவம் முதலியவற்றில் பல வேறுவகை வேற்றுமைகள் காணப்படுகின்றன. அவ் வேற்றுமை யிடையே ஒவ்வொன்றினும் ஒன்றையொன்றை ஈர்த்து மகிழ்விக்கும் அழகும் பொற்பும் அமைந்திருப்பது உண்மை. இயற்கைப் பொருளிடத்தே காணப்படும் எழிலும் அழ கும் மக்கள் மனத்திற் படிந்து அவர் செய்யும் செயற்கைப் பொரு ளிடத்தும் வெளிப்பட அமைந்து விடுகின்றன. நாம் காணும் மோட்டார்கார்களின் அகக்கூறுகளில் ஒருமை காணப்படுவது போலப் புறக்கூறுகிய தோற்றம், அமைப்பு, நிறம் முதலியவற்றில் காணப் படாது வேற்றுமையுற்றுலும், நம்கண்ணையும் கருத்தையும் ஈர்த்து நிறுத்தி இன்புறுத்தும் வனப்பும் அழகும் தனித்து விளங்குகின் றன. அகமும் புறமுமாகிய இருவகைக் கூறுகளையும் நோக்கிப் புறத் தோற்றத்தில் பூத்து விளங்கும் பொற்பிலும் வனப்பிலும் அமைந்த

அழகையும் கவினையும் காண்பதிலும் பிறர்க்குக் காட்டுவதிலும் புல னெறி யுண்மையாராய்ச்சி பெரிதும் ஈடுபட்டு நிற்கிறது. இது மக்களுயிரின் செயற்றிறத்தை ஊக்குதற்கும் அறிவுத் திறத்தை ஆதரிப்பதற்கும் பெருந்துணையாய் நிற்றலால், ஆராய்ச்சியாளர் புல னெறித் துறைக்குச் சிறந்த இடத்தை நல்கித் திருவுறுகின்றனர்.

இப் புலனெறித் துறையைப் பண்டைத் தமிழ் நூலார் புலத் துறை யென்றும் புலனெறி வழக்கென்றும் புகன்று உரைத்தனர். பிற்காலத்தார் இலக்கியநெறி என்றும், புலனெறியுண்மை யாராய்ச் சியை இலக்கிய ஆராய்ச்சி யென்றும் வழங்கலாயினர். புலனெறிக் குரியவன் புலவன். புலம் என்பது அறிவு; ஆகவே அறிவுடையவன் புலவனாகின்றான். உயிர் உணரும் தன்மையது. எனவே உயி ருடையவர் அனைவரும் உணர்வுடையவரே; ஆயினும் அவருள்ளும் பொதுவகையாலன்றிச் சிறப்பு வகையால் மேன்மை யுறுபவரையே "உணர்வுடை மாந்தர்" என ஆன்றோர் உயர்த்துக் கூறுகின்றனர். ஆசிரியர் தொல்காப்பியனார்,

> "கண்ணினும் செவியினும் திண்ணிதின் உணரும்
> உணர்வுடை மாந்தர்க் கல்லது தெரியின்
> நன்னயப் பொருள்கோள் எண்ணருங் குரைத்தே"

என்று உரைப்பதனால் இதனை அறியலாம். அவ்வாறே அறிவுடை யோர் அனைவரும் அறிஞர் எனப்படுவதில்லை. சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்ற புலன்கள் ஐந்தாலும் உலகியற்பொருள்களைக் காண்பவர் புலவராயினும், அப் புலன்களை ஆளும் அறிவினால் உலகியற் பொருள்களின் உண்ணிகழ் கூறுகளை உள்ளத்தே வைத்து ஆய்ந்து கொள்வதில் புலவன் சிறப்புறுகின்றான். அவ னுடைய் புலமையில் விஞ்ஞான முதலியவற்றின் உண்மைகளும் உண்மைக் கூறுகளும் அமைந்துள்ளன. அவனே புலத்துறை முற்றியவன்; அவனே புலவன் என்ற சொற்குப் பொருளாகின்றான்.

நம் நாட்டில் புலத்துறை முற்றிய புலவனது புலனெறி சிறந்த வகையில் இதிகாறும் இயன்று வந்துள்ளது. உள்ளதன் உண்மையும் இல்லதன் இன்மையும் உய்த்தறியும் அவனுடைய புலமையுள்ளம் அவ் வுண்மைகளை உலகிற்கு உரைக்க முற்படுகிறது. எழுத்தும் இசையும் நடிப்பும் ஓவியமும் சிற்பமும் அவன் உள்ளத்துக்குக் கருவியாகின்றன. பிறருடைய கண்ணும் காதுமாகிய சிறப்புடைய அறிகருவிகளில் கண்ணை மட்டும் நடிப்பும் ஓவியமும் சிற்பமும் வாங்கிக் கொள்கின்றன; இசை செவியைப் பற்றிக்கொள்ளுகிறது. எழுத்து ஒன்றுதான் கண்ணையும் செவியையும் பற்றி அறிவும் இன்பமும் அளிக்கின்றது. அறிவும் இன்பமும் உடலோடு இயக்கும் மக்கட்கு இலக்கமாதலால் அவற்றை நல்கும் எழுத்துத் துறை இலக்கியத்துறை எனப்படுதற்கும் பொருத்தமாக வுளது.

இலக்கியத்துறையில் பணிசெய்த தமிழ்ப்புலவர்களின் இலக்கியங்களை நோக்கின், நால்வகைப் புலனெறிகள் அவற்றில் காணப்படுகின்றன. அவை உள்ளது புணர்த்தல், இல்லது புணர்த்தல் என இரண்டாய் நின்று ஒவ்வொன்றும் இவ் விரண்டாய் விரிகிறது. உள்ளது புணர்ப்பு, உள்ளோன் தலைவனாக உள்ளது புணர்த்தல். இல்லோன் தலைவனாக உள்ளது புணர்த்தல் எனவும், இல்லது புணர்ப்பு, உள்ளோன் தலைவனாக இல்லது புணர்த்தலும், இல்லோன் தலைவனாக இல்லது புணர்த்தலும் எனவும் வரும். இவற்றுள் உள்ளது என்றது உலகியலோடு ஒட்டிநிற்பது; இல்லது உலகியலில் எங்கும் காணப்படாதது. உள்ளது புணர்த்த இலக்கியங்கள் எக்காலத்தும் பயன் தருவனவாய் இலங்குகின்றன; இன்றும் யாவரும் விரும்பிப் பயில்கின்றனர். இவ் வகையில் சங்க இலக்கியங்கள் முன்னணியில் நிற்கின்றன. சிலப்பதிகாரம் மணிமேகலை சீவகசிந்தாமணி ஆகிய மூன்றும் சிறிதளவு இல்லது புணர்க்கப்பட் டிருப்பினும் அவற்றை விலக்கி நோக்கியவழி உள்ளது புணர்த்த இலக்கியப்பண்பு சிறிதும் குன்றாமையால் உள்ளது புணர்த்த வகையில் அடக்கிக் கோடற்கு இடமுண்டு. இல்லது புணர்த்த இலக்கிய வகையில்,

கோவை, உலா, தூது, மடல் முதலியன வந்து நிற்கின்றன. இக் கோவை முதலிய இலக்கியங்களுள் மேலேகண்ட விஞ்ஞான முதலிய உண்மைகட்குச் சேர்ந்த இடம் இல்லாமையால், விஞ்ஞான முதலியவற்றின் அறிவு பெற்றுள்ள இந் நாளில் அவை சிற்றிலக்கியமென்ற பெயர் பூண்டு போதிய செல்வாக்கின்றி நூல் வடிவில் பழையோர் பேணித் தந்த பழந் தமிழ்ப் பொருளாய்த் தம்மை விரும்பிப் பயில்வோர் குன்றி யிருக்கின்றன.

இன்றும் என்றும் இன்பம்தரும் வகையில், உள்ளது புணர்த்த இலக்கியங்களுள் அழகும் இன்பக் கூறும் பொருந்துமாறு புனைந்துரைப்பகுதிகள் காணப்படுவதுண்டு. புனைந்துரைக்கும் பொய்யுரைக்கும் வேறுபாடு அறியாத சிலர் அழகு தரும் புனைந்துரையையும் பயனில்லாத பொய்யுரையாகக் கருதி மயங்குவாராயினர். "பொய் பிறந்தது புலவன் வாயிலே" என்ற பொதுமொழி இம் மயக்கத்தால் விளைந்த பயன்.

செய்யப்படும் எவ்வகைச் செயற்கைப் பொருளிடத்தும் காண்பார் கண்ணையும் கருத்தையும் ஈர்க்கும் வனப்பும் அழகும் அமைப்பது இயற்கை நெறி. இலக்கியப் புலவன் இந்த இயற்கை நெறிக்கு உட்பட்டவனாதலால் அவன் செய்யும் இலக்கியமாகிய பொருளின் கண் புனைந்துரை வழங்கும் வனப்பும் புலத்துறை யின்பம் தரும் அழகும் அமையாது ஒழியாவன்றோ? ஏனைப் பொருட்கு அழகு செய்தல் ஊதியம் கருதியது; இலக்கியப் பொருட்கு அது வேண்டாவே என்றொரு கேள்வி எழுவதும் உண்டு. உண்மை யுணர்ந்த உயர்ந்தோர் உள்ளத்தே இஃது எழாதாயினும் ஏனோர் இதனை எழுப்புவது இயல்பு. சுமார் மூந்நூறு ஆண்டுகட்கு முன் மேனாட்டில் இக் கேள்வி எழுந்தது. அதற்கு அக்காலத்தே செருமனி நாட்டில் வாழ்ந்த ஷோபனவர் என்ற நல்லிசைப் புலவர் முன்வந்து, "நாம் உயிர் வாழ்வதற்கு உயிர்க்காற்றே (Oxygen) வேண்டுவது; அஃது இல்லையாயின் நாம் மடிந்து போவோம் என்பது விஞ்ஞான வுண்மை. அந்த உயிர்க் காற்றைப் பிற காற்று வகைகளினின்றும்

பிரித்துத் தூயநிலையில் வடித்து உட்கொண்டோமாயின், சில விநாடிகளில் நுரையீரல் வெந்து இறந்து விடுவோம். இதனால் உயிர்க்கு இன்றியமையாத உயிர்க்காற்றும் பிற காற்றுக்களோடு கலந்து புனைந்துருவாய் வருதல் வேண்டும் என்பது இயற்கையின் விதியென உணர்தல் வேண்டும். மேலும், உண்மையை உள்ளவாறே ஒப்பனையும் ஒளியுமின்றி உரைத்தால் அது கேட்போர் உள்ளத்தை யுற்று ஒளிசெய்யாதொழியும். உடற்குட்புகுந்து உயிர்க்கு நலம் செய்வதற்கு உயிர்க்காற்றோடு பிறகாற்று வகைகளைக் கலந்து உயிர்க் காற்றாகப் புனைந்து இயற்கை வழங்குவது போல உண்மையும் ஒப்பனையால் (புனைந்துரையால்) ஒளியூட்டப்பட வேண்டும்" என விடை யிறுத்தார்.

உள்ளதன் உண்மையை யுரைக்குமிடத்துப் புனைந்துரை வகையால் பொய் சிறிது கலக்குமாயினும் அப்பொய்ம்மை வாய்மையாய் உண்மை தரும் உறுதிப்பயனைப் பெறுவித்தலால் அது விலக்குண்ணாது. இன்றேல் கொள்ளத்தக்க உண்மையும் காண்போர் கருத்தைக் கவரமாட்டாமல் பொய்யாய் விலகிப் போம். "பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த நன்மை பயக்கும் எனின்" என்ற இயற்கையறமும் ஈண்டு நினைவுகூரத் தக்கது. இயற்கையை அடிப்படுத்தித் தனக்கு ஏவல் செய்விக்கும் அளவுக்கு மக்களுயிர் உயர்ந்து நிற்கிறது. இதற்கு இந்த ஏற்றத்தைத் தந்தது விஞ்ஞான வளர்ச்சி. அதன் அடிப்படைக் கூறுகளுள் நிலத்தியல் கணக்கு (Geometry) என்பது ஒன்று. அந்தக் கணக்கியல் புள்ளியும் கோடும் என்ற இரண்டின்மேல் நிற்கிறது. புள்ளியாவது உட்பரப்பில்லாத வட்டம் என்றும் அஃது இயங்குமிடத்து உண்டாகும் சுவடே (Locus) கோடு என்றும், அக் கோட்டுக்கு நீளமுண்டேயன்றி அகலமென்பதே கிடையாது என்றும், அக் கணக்கியல் கூறுகிறது. இது வெறும் புனைந்துரையே யன்றி உண்மையன்று. இவ்வாறே நோக்கின், புனைந்துரை கலவாத வரலாற்று நூலே இந்த நிலவுலகத்தில் எங்கும் கிடையாது. ஆகவே, புனைந்துரை உண்மைக்கு வேண்டாததன்று என்பது தெளிய உணரவேண்டுவதொன்றும்.

# காஞ்சி-கயிலாசநாதர் கோவில்

திரு, டாக்டர் மா. இராசமாணிக்கனர் அவர்கள், தியாகராசர் கல்லூரி, மதுரை.

## கோவில் இடமும் அமைப்பும்

இராசசிம்மன் கட்டிய உலகம் போற்றும் கயிலாசநாதர் கோவில் இப்போது நகரத்தின் மேற்றிசையில் கழனிகளுக்கு இடையில் இருக்கிறது. இதற்குப் பின்புறம் சிறிதுதொலைவில் இன்றைய கச்சி நகரின் மேற்குஎல்லை முடிவுபெறுகிறது. ஆயின், இது கட்டப்பட்டகாலத்தில் இந்தக் கோவில், நகரத் தெருக்களுக்கு இடையிற்றான் இருந்தது என்பது பல கல்வெட்டுகளால் தெரிகின்றது. இக் கோவிலுக்குப் புறமதில், திருமடைவிளாகம் முதலியன இருந்தன; ஏராளமாக நிலங்கள் இருந்தன. கோவிலைச் சுற்றிலும் மாடவீதிகள் இருந்தன.[1] இராசசிம்மன், 'மாடெல்லாம் சிவனுக்காகப் பெருஞ்செல்வம் வகுத்தல் செய்தான்' என்று சேக்கிழார் பெருமான் கூறியது முற்றும் உண்மையே ஆகும்,

## கல் வெட்டுகள்

கயிலாசநாதர் கோவிலில் பல கல்வெட்டுகள் இருக்கின்றன.[2] அவை, கி. பி. 7-ஆம் நூற்றாண்டு முதல் 13-ஆம் நூற்றாண்டு வரை தமிழகத்தை ஆண்ட பல்லவர், சோழர், விஜயநகரத்தார் கல்வெட்டுகளாக இருக்கின்றன. அவற்றுள் இக் கோவில் கட்டிய இராசசிம்மன் கல்வெட்டுகளும், அவன் மகனை மூன்றும் மகேந்திரன், அவன் மனைவி ரங்கபதாகை முதலியோர் கல்வெட்டுக்களும் உள்ளன. பல்லவரை வென்று தொண்டை நாட்டை ஆண்ட முதற்பராந்தகன், இராசராசன், இராசேந்திரன், முதற் குலோத்துங்கன், இவர்தம் கல்வெட்டுகளும் பல

[1] S. I. I. Vol. I Nos. 24-30, 86-88. 140-150.
[2] Vide S. I. I. Vol. I Nos. 24-30, 82-88, 144-150.

வாகக் காண்கின்றன. சோழர் காலத்தில் இக் கோவில், மாடவீதிகள், வெளிச்சுற்று, மடவிளாகம், மடங்கள் முதலியவற்றையும் அளவிடற்கரிய செல்வத்தையும் பெற்றிருந்தது என்பதை இக் கல்வெட்டுகள் உணர்த்துகின்றன. இரண்டாம் நந்திவர்மன் காலத்தில் காஞ்சியைக் கைப்பற்றிய இரண்டாம் விக்கிரமாதித்தனது கன்னடக் கல்வெட்டும் இங்கே இருக்கின்றது. அதனில், 'இராசசிம்மன் கட்டிய கோவிலில் உள்ள பெருஞ்செல்வத்தைக் கண்டு வியந்த வல்லபன், அதனைக் கவராது அப் பெருமானுக்கே விட்டுவிட்டான்' என்பது குறிக்கப்பட்டுளது. இவ் வுண்மையைச் சாளுக்கியருடைய வக்கலேரி, கேந்தூர்ப் பட்டயங்களும் பகர்கின்றன.[1]

## கோவிற் சிறப்பு

இராசசிம்மன் தன்னை வாத்ய வித்யாதரன் என்பதற்கேற்ப, இக் கோவிலில் யாழ் வாசிக்கும் உருவங்கள் பல செதுக்கப்பட்டுள்ளன. இவன் இசை, நடனம், சிற்பம் ஓவியம் இவற்றில் பேரறிவு படைத்த பெருவேந்தன் என்பதற்குக் கயிலாசநாதர் கோவில் ஒன்றே போதிய சான்றாக அமைந்துள்ளது. இக் கோவில் ஏறத்தாழ வைகுந்தப் பெருமாள் கோவிலுக்கு நேர் எதிரே அமைந்திருத்தல் வியத்தற்குரியது. இங்குள்ள கணக்கற்ற சிற்பங்கள் சுவர்களில் இருத்தல் போலவே அக் கோவிற் சுவர்களிலும் இருத்தல் இங்கு நினைக்கத்தகும். சுருங்கக் கூறின், கயிலாசநாதர் கோவில் பல்லவரது சிற்பக் கலையை உலகத்திற்கு அறிவிக்க எழுந்த சிற்பக் கலைக்கூடம் என்னலாம்.

### சில கல்வெட்டுச் செய்திகள்-இராசசிம்மனைப் பற்றியவை:

"இராசசிம்மன் (கி. பி. 685-720) கலியுகத்தில் அசரீரி[2] (கேட்டவன்) சிறந்த மற்போர் வீரன்; யானை நூல் அறிவில் வத்சராசனையும்

[1] E P. Ind. Vol. 5, P. 200; Vol. 9, P. 200.

[2] இந்த அசரீரி கேட்ட செய்தியையே, பூசலார் புராணத்தில் பல்லவன் கனவு கண்ட செய்தி' யாகச் சேக்கிழார் கூறியுள்ளார் என்பது ஆராய்ச்சியாளர் கருத்து.

பகதத்தனையும் ஒத்தவன்; போரில் விசயனுக்கும் இராமனுக்கும் ஒப்பானவன்; உடல் வலியாலும் புகழாலும் நரசிம்ம அவதாரத்தை ஒத்தவன்; நாடு பிடிப்பதில் பேரவாவுடையவன்; போரில் மிகக் கொடியவன்; தன் பகைவரை அழிப்பவன்; இவனது செல்வாக்கு உயர்கின்றது; அஞ்சத்தக்க பேராண்மை உடையவன்; அடக்கத்தினல் வெல்லத் தக்கவன்; போரில் சிங்கம் போன்றவன்; வில்லையே துணையாகக்கொண்டவன்; பகைவர்க்கு இடியேறு போன்றவன்; கொடிய பேரரக்கனை ஒழிப்பவன்; போர் வீரரை அழிப்பவன்; போரில் மனவுறுதி உடையவன்; போரில் செல்வத்தை வெல்லுபவன்; பகைவருடைய பொருளைப் போரில் கைப்பற்றுபவன்; வீரத்தில் மகேந்திரனை ஒத்தவன்; தீடீரென இடிக்கும் இடி போன்றவன்; பல இடங்களை வென்றவன்; போரில் களைப்படையாதவன்; செருக்கரை அடக்குபவன்.........."

கயிலாசநாதர் கோவிலில் மட்டும் இராசசிம்மனுடைய விருதுப் பெயர்கள் ஏறத்தாழ 250 காணப்படுகின்றன. அவற்றில் 'ரிஷபலாஞ்சனன், ஸ்ரீ சங்கர பக்தன், ஸ்ரீ ஆகமப் பிரியன், சிவசூடாமணி[1] என்பன போன்றவை இவனது சைவ சமயப்பற்றைக் குன்றின் மீதிட்ட விளக்குப்போல் ஒளிரச் செய்கின்றன. இராசசிம்மன், சைவசித்தாந்தத்தில் பேரறிவுடையவன் என்றும் கயிலாசநாதர் கோவில் கல்வெட்டொன்று கூறுகிறது.

## சோழர் காலத்துச் செய்திகள்

இக் கயிலாசநாதர் கோவில் ஏறத்தாழக் கி. பி, 700-இல் கட்டப்பட்டது என்று சொல்லலாம்; அது முதல் பல்லவர் ஆட்சி முடியும் (ஏறத்தாழக் கி. பி. 900) வரை மிகவுயர்ந்த நிலையில் இருந்தது; 'பிற்காலச் சோழர்' ஆட்சி ஏற்பட்டது முதல் ஏறத்தாழக் கி. பி. 1100 வரையிலும் அவ் வுயரிய நிலையினின்றும் சிறப்புக் குறையாமல் இருந்தது. இராசராசன் காலத்து, கச்சிங்கரப் பொதுமக்கள் இக் கோவில்

[1] இவனும் தன் தந்தையைப் போலவே கண்மணியால் செய்யப்பட்ட சிவலிங்கத்தை மகுடமாகத் தாங்கியிருந்தான் போலும்!

பண்டாரத்திலிருந்து ஏராளமான பொன்னைக் கடன் பெற்றனர்; பலர் 270 ஆடுகள், 180 ஆடுகள் வீதம் கோவிலுக்குத் தானம் செய்தனர்; கோவில் பத்திரங்கள் (கல்வெட்டுகள்) எல்லாம் சண்டேசுவரர் பெயரால் பொறிக்கப்பட்டன;[1] இக் கோவிலில் 'திருவுண்ணாழிகைச் சபையார் இருந்தனர்; கோவில் 'கணக்கன்' இருந்தான். சோழர் காலத்தில் இக் கோவில் 'பேரிய கற்றளி' எனப் பெயர் பெற்றிருந்தது; பல்லவர் காலத்தில் 'இராசசிம்மேசுவரம்' எனப் பெயர் பெற்றிருந்தது.

இக்கோவிலில் உள்ள இராசேந்திரன் காலத்துக் கல்வெட்டு ஒன்றினால், இக் கோவிலில் கல்லூரி ஒன்று இருந்தது தெரிகிறது. அக் கல்லூரி, காஞ்சியில் நெடுங்காலமாக இருந்து புகழ்பெற்ற வடமொழிக் கல்லூரியாகஇருத்தல் வேண்டும் என்பது ஆராய்ச்சியாளர் கருத்து. அக் கல்லூரியில் இராசேந்திர சோழன் காலத்துத் 'தேவார நாயகம்' என்ற அரசியல் அலுவலாளன் தங்கி இருந்தான் என்பது கல்வெட்டுச் செய்தி ஆகும்.

## இக் கோவிலின் அழிவு

முதற் குலோத்துங்க சோழன் காலத்தில் (கி. பி. 1070-1120) எக்காரணம் கொண்டோ இக் கோவில் இழிநிலை அடையலாயிற்று. "இக் கோவில் மூடப்பட்டது; இதற்குரிய நிலங்கள் விற்கப்பட்டன; கோவிலின் வெளிப் பிராகாரமும், திருமடை விளாகமும் அனய பதங்கா வுடையார் கோவிலுக்குத் தரப்பட்டன."[2] இங்ஙனம் முதற் குலோத்துங்கன் ஆட்சியில் பொலிவிழந்த இக் கோவில் ஏறத்தாழக் கி. பி. 1364-வரை மூடப்பட்டே கிடந்தது.

## விஜயநகர ஆட்சி

இங்ஙனம் ஏறத்தாழ 250 ஆண்டுகள் மூடப்பட்டுக் கிடந்த இக் கோவில், கம்பண உடையார் காலத்தில் (1364-இல்) திறக்கப்பட்டது;

[1] S. I. I. Vol. I, Nos 84, 85, 89, 110, 112, 131, 140, 149, 159
[2] S. I. I. Vol. I. 86.

அவ் வாண்டு ஆடி மாதம் முதல், விழா நடைபெறலாயிற்று; முருங்கையூர் சர்வமானியமாக விடப்பட்டது. அக் காலத்திலும் இக் கோவிலைச் சுற்றி நான்கு மாடவீதிகள் இருந்தன. கயிலாசநாதர் கோவில் ஆட்சிக் குழுவினர் வடக்குச் சந்நிதித் தெருவில் இருந்த சில வீடுகளை 150 பணம் வீதம் கைக்கோள முதலிமார்க்கு விற்றுவிட்டனர்.

"வடசிறகில் முன்னால் இருக்கும் ஆண்டார் சுந்தரப்பெருமாள் மடமும், திரு அகத்தீசுவரம் உடைய நாயனார் கோவிலுக்குக் கிழக்கு-திருமஞ்சனப் பெருவழிக்கு மேற்கு-உள்ள மனை நீங்கலாக மனை அடங்கலும் இந்நாள் முதல் என்றும் கைக்கொள்ளற்கும் கைக்கோள முதலிகட்கும் இந்த வடசிறகில் உள்ள மனையும் மனைப்படைப்பையும் சண்டேசுவர விலையாக விற்று இவர்களிடம் வாங்கிக் கோவில்பண்டாரத்தில் முதல் இட்ட இ..........[1]"

கோவில் அதிகாரிகள் அதிகாரி விருப்பப்படி, கோவிலுக்கு அருகில் மேலைத்தெருவில் இருந்த மேலைச் சந்நிதித்தெரு மடமும் சிறிது நிலமும் கோவிலில் வேதம் ஓதும் தொழிலைச் செய்துவந்த திருக்கழுக்குன்றத்து மாகேசுவரரான காங்கேயற்குக் கொடுத்தனர்[2].

## சிற்பங்கள்

இக் கோவிலினுள் நுழைந்தவுடன் எதிரில் உள்ள சிறிய கோவில் இராசசிம்மன் மகனான மூன்றாம் மகேந்திரனால் கட்டப்பட்டது. இராசசிம்மனது கோப்பெருந்தேவியான ரங்க பதாகை என்பவள் சைவப்பற்று மிக்குடையவள். அவள் கட்டிய சிறிய கோவில் ஒன்றும் கயிலாசநாதர் கோவிலில் இருக்கின்றது. இக் கோவிற் சிற்பங்கள் உள்ளத்தை உருக்குவனவாகும். அவற்றுள் பெரிதும் பாராட்டத் தக்கவை சிவனார் ஆடிய பலவகைக் கூத்துவகைகளைக் குறிப்பனவாகும்.

[1] Ibid. 86.
[2] Ibid. 88.

அவை (1) நாதாந்த நடனம், (2) லதாவ்ரிசிக நடனம், (3) தாண்டவ நடனம், (4) குஞ்சித நடனம் என்பன. இவற்றுள் பலவாகக் காணப்படுவது குஞ்சிதநடனமே யாகும். இதுவே இராசசிம்மன் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தது போலும்! [1]

## முடிவுரை

இக் கயிலாசநாதர் கோவில் தென் இந்தியக் கட்டடக் கலைக்கும் ஓவிய-சிற்ப-இசை-நடனக் கலைகட்கும் இருப்பிடமாகும். இத்தகைய சிறப்புடைய இதனைக் கட்டுவித்த பரம சிவபக்தனான இராசசிம்மன் இன்று இக் கோவிலைக் காண்பானாயின்........என்ன நினைப்பான்? சற்று எண்ணிப் பாருங்கள். அவன், நாகரிகக் கலைகட்கு இருப்பிடமாக அமைத்த இக் கோவில், இன்று கவனிப்பாரற்றுப் பாழ்பட்டுக் கிடப்பது, தமிழ் மக்களது அநாகரிக நிலையை விளக்கப் போதிய சான்றாகும். அழிந்தது போக எஞ்சியுள்ள கோவிற் பகுதிகளேனும் அழிவுறாமல் இருக்கப் பார்த்தல் அறிவுடைத் தமிழ்மக்கள் கடமையாகும். இத்தகைய வியத்தகு வேலைப்பாடமைந்த கோவில்களைக் கொண்டே நமது பழைய நாகரிகம் உயர்ந்தது என்று மேனாட்டார் பாராட்டுகின்றனர் என்பதை நாம் மறத்தலாகாது. வரலாற்றுச் சிறப்புடைய இத்தகைய பழைய கோவில்களைத் தமிழ்மக்கள் பாதுகாக்கப் புறப்படும் நாளே தமிழர் வாழ்வு சிறப்புறுதற் கேற்ற நன்னாள் ஆகும்.

---

[1] இச்சிற்பங்களைப் பற்றிய முழு விவரங்கள் டாக்டர் மீனாட்சி அம்மையார் வரைந்துள்ள 'கயிலாசநாதர் கோயில் சிற்பங்கள்' என்னும் ஆங்கில நூலில் காணலாம்.

# இயற்கையைப் பயன்படுத்துதல்

## 2 *சூரியன்

திரு. பெ. நா. அப்புஸ்வாமி ஐயர் அவர்கள், B.A., B.L., சென்னை.

பண்டைக் காலத்தில் வாழ்ந்த மக்கள் சூரியனைத் தெய்வமாக வணங்கினார்கள். 'பரிதியே உயிர் யாவிற்கு முதலே' என்றும், 'ஞாயிறு போற்றுதும்' என்றும் அதை வழிபட்டு வணங்கினார்கள். பிற்காலத்திலே வாழும் நாம் பிரபஞ்சத்திலுள்ள பல கோடிக் கணக்கான நக்ஷத்திரங்களில் நமது சூரியனும் ஒன்று என்பதைத் தெரிந்துகொண்டோம். ஆகையால், சூரியனுக்குத் தெய்விகத் தன்மை இல்லாது போயிற்று. ஆயினும், நம்முடைய உலகத்திலுள்ள உயிர்களில் பெரும்பான்மை தோன்றுவதற்கும் வாழ்வதற்கும் சூரியனே அடிப்படைக் காரணம் என்னும் உண்மை மாறவில்லை. ஆகையால், இன்றும் விஞ்ஞானிகள் உட்பட அனைவரும் சூரியனைப் போற்றிவருகிறார்கள்.

உண்மையில் சூரியன் ஒரு மிகப் பெரிய தீக்கோளம். அது பிரபஞ்ச வெளியிலே நானுபக்கமும் இடைவிடாமல் மிக நெடுங் காலமாக ஒளியையும் வெப்பத்தையும் வீசி வந்திருக்கிறது. இன்றும் வீசிவருகிறது. இன்னும் மிக நெடுங்காலம் வீசிவரும் என்பதில் ஐயமில்லை.

இவ்வுலகில் சக்தியைப் பெறுவதற்கு நாம் பயன்படுத்தும் பொருள்கள் எல்லாவற்றுக்கும் சூரியனே அடிப்படைக் காரணம். உதாரணமாக, சூரியனின் துணையால் நிலக்கரி இயற்றப்பட்டது. பண்டைக்காலமரங்கள் ஒளிச்சேர்க்கை (Photosynthesis) என்னும்

---

* சென்னை அகில இந்திய வானொலி நிலயத்தில் 14—7—54-ல் ஒலி பரப்பியது; அந் நிலயத்தார் அநுமதியுடன் வெளியிடப் பெறுகிறது.

அற்புதச் செயலாலும், இரசாயன மாறுபாடுகளாலும், தங்களுடைய இலைகளின் மூலமாகச் சூரியனிடமிருந்து சக்தியைப் பெற்றன. அம் மரங்களே நிலக்கரியாயின; விறகாயின. சூரிய வெப்பத்தின் விளைவே காற்றும், மழையும், அருவியும் ஆறும். எண்ணெய் என்பது சூரியனும் கடலுமாகச் சேர்ந்து நிகழ்த்திய செயல்களின் விளைவு.

சூரியன் வீசிச் சிதறும் ஒளியிலும் வெப்பத்திலும் ஒரு மிகச் சிறிய பகுதியே நமது பூமியின்மீது உறைக்கிறது. ஆயினும், இதன் அளவும் மிகமிகப் பெரிது என்றே சொல்லும்படி இருக்கிறது. பன்னிரண்டேகால் கோடிகோடி டன் எடையுள்ள நிலக்கரியை எரித்தால் எவ்வளவு வெப்பம் உண்டாகிறதோ, அவ்வளவு வெப்பம் ஒவ்வொரு வருஷமும் சூரியன் நமக்கு அளித்து வருகிறது என்றும், ஒவ்வொரு நொடியிலும் அறுபதுலக்ஷம் டன் நிலக்கரியை எரிப்பதற்கு ஈடானது சூரியனிலிருந்து நமக்குக்கிடைக்கும் வெப்பம் என்றும், ஒரு நாளில் சூரியனிலிருந்து நமது பூமியின் தளத்தில் ஒன்றரை மைல் பரப்பில் பொழியப்படும் சக்தியானது ஹிரோஷிமாவில் போடப்பட்ட அணு-குண்டின் சக்திக்குச் சமமாக இருக்கிறது என்றும் பலர் பலவகையாகக் கணக்கிட்டுச் சூரியனது பெருமையை நமக்கு விளக்க முயலுகிறார்கள். இப்படி வழங்கியும் அதன் சக்தி குறைவுபட்டதாகவே நமக்குத் தெரியவில்லை. ஆகவே, சூரியன் மிகமிகப் பெரிய சக்திக் களஞ்சியம் என்பதில் ஐயமில்லை.

சக்தியை மேன்மேலும் நாடிவரும் மக்கள் இதை உணர்ந்து இதன் சக்தியை எப்படிப் பயன்படுத்தலாம் என்று பண்டைக்காலம் முதலே ஆராய்ந்து வந்திருக்கிறார்கள். அதன் வெப்பத்தைப் பயன்படுத்துவதே முதல் முயற்சி. கிரேக்க நாட்டு அறிவாளியாகிய ஆர்க்கிமீடீஸ் சூரிய கிரணங்களை ஓரிடத்தில் குவியச்செய்து எதிரிகளின் கப்பல்களைத் தீக்கு இரையாக்கினார் என்ற கதையைக் கேட்டிருப்பீர்கள். அவருடைய காலத்துக்கு முன்னாலே சூரியனின்

கிரணங்களால் பற்பல பொருள்களை வெப்பமுறச் செய்யலாம் என்று தெரிந்து பயன்படுத்திவந்தார்கள்.

பிற்காலத்திலும் சூரிய கிரணங்களைக் குவியச்செய்து, மிகுந்த வெப்பத்தை உண்டாக்கியபோது இரும்பு முதலிய உலோகங்களையும் உருக்கமுடிந்தது. இவ்வாறு செய்தவர்களில் பிரான்சுநாட்டு விஞ்ஞானியாகிய லாவாய்சியே (Lavoisier) ஒருவர். அமெரிக்க நாட்டில் வாழ்ந்த கான் (Conn) என்பவர் பத்தடி குறுக்களவுள்ள அலுமினியக் குவி-ஆடி ஒன்றை அமைத்தார். அதன்மூலமாகப் பத்தே னொடிகளில் மூவாயிரம் சென்டிகிரேட் டிகிரி வெப்பத்தை அவரால் உண்டாக்க முடிந்தது. ஆனால், அந்த வெப்பம் ஓர் அங்குலத்தில் கிட்டத்தட்ட மூன்றிலொரு பங்கு அளவே உள்ள ஒரு சிறிய இடத்தில் மட்டுமே உறைக்கக் கூடியதாக இருந்தது. இது சில பரிசோதனைகளுக்குப் பயன்பட்டது; வாழ்க்கைக் காரியங்களுக்கு உதவவில்லை.

அமெரிக்காவில் பிலடெல்பியாவிலும், பாஸடீனாவிலும், அரிஸோனாவிலும், எகிப்திலும் சூரிய வெப்பத்தைப் பயன்படுத்துவதற்கான கருவிகளை ஐம்பது அறுபது வருஷங்களுக்கு முன்னால் இயற்றினர். கருவி வேலை செய்தது; ஆனால், செலவுக்குத்தகுந்த பயன் இல்லை.

சுமார் இருபத்தைந்து வருஷங்களுக்கு முன்னால் வாஷிங்டனில் உள்ள ஆபட் (Abbot) என்பவர் காலிபோர்னியாவில் வில்சன் மலையின் உச்சியில் ஒரு கருவியை வைத்தார். அது சூரிய வெப்பத்தால் நீரைக்கொதிக்கச் செய்து, நீராவியை இயற்றி, கால் குதிரை யோட்டச் (Horse power) சக்தியுள்ள நீராவி எந்திரத்தை ஓடச் செய்தது. அவர் சூரியனது வெப்பத்தால் சமையல் செய்வதற்கேற்ற அடுப்பு ஒன்றையும் அமைத்தார். அதில் சில பலகாரங்களையும் சமைத்துக் காட்டினர். ஆனால், அந்தக் கருவியில் செலவு அதிகம்.

இதற்கு ஒரு முக்கிய காரணம் சூரியன் ஒரே நிலையிலிருந்து ஒரே இடத்தில் எப்போதும் ஒன்றுபோல் வீசாததேயாகும். பூமி சுழல்வதால் சூரியனின் நிலை மாறிக்கொண்டேயிருக்கிறது. ஆகையால், சூரியனின் கிரணங்கள் ஒரே திசையாக வந்து கருவியின்மேல் படவேண்டுமானால், சூரியனைநோக்கிக் கருவி திருப்பப்பட்டுக் கொண்டே வரவேண்டும் அல்லவா? இத்தகைய கருவியை அமைக்கவும், அது சீராக வேலை செய்யும்படி கவனித்துப் பழுதுபார்க்கவும் செலவு அதிகம். மேலும் சூரியன் இல்லாத வேளைகளில் அதாவது இரவிலும், மேகம் செறிந்த நாட்களிலும் மழை நாட்களிலும் இந்தக் கருவி பயன்படாது.

ஆகையால், சூரியன் பிரகாசிக்கும்போது, அதன் சக்தியை ஏற்று, அதைச் சேகரித்து வைத்து, நமக்கு வேண்டியபோது அச்சக்தியைப் பயன்படுத்துவதற்குரிய முயற்சிகள் அவசியம். இவ்வாறு கிடைத்தபோது சேகரித்த சூரிய வெப்பத்தைப் பத்திரப்படுத்தி வைப்பதற்கு எண்ணெய், தண்ணீர், சாணைக்கல், சோடியம் சல்பேட்டுஉப்பு முதலியவைகளைப் பயன்படுத்திப் பார்த்துவருகிறார்கள்.

ரஷியாவில் ஸ்டாலின்கிராடு நகரத்தில் சுமார் பன்னிரண்டு வருஷமாகச் சூரிய சக்தியைப் பயன்படுத்தும் முயற்சிகள் நடந்து வருகின்றன. பரவளைவுள்ள (Parabolic) ஆடிகளைக்கொண்டு சூரிய கிரணங்களைக் குவியச் செய்ய முயன்றார்கள். இந்த ஆடிகள் சாமானியக் கண்ணாடியால் அமைக்கப்பட்டவை; சுமார் 33 அடி குறுக்களவுள்ளவை. சுமார் பத்து வருஷங்களுக்கு முன் மத்திய ஆசியாவில் சூரிய சக்தி ஆராய்ச்சி நடத்துவதற்காக டாஷ்கென்ட் (Tashkent) என்னும் இடத்தில் இவ்வகைக் கருவி ஒன்று வேலை செய்தது.

நமது நாட்டில் பூசாவிலும் (Pusa), டில்லியிலும் இதைப்பற்றி ஆராய்ச்சிகள் நடந்துவருகின்றன. சிறிய எந்திரங்களை இயக்கு

சிப்பதற்கு ஏற்றவையான சக்தி குறைந்த எஞ்சின்களை ஓட்டுவதற்குப் போதிய நீராவியைச் சூரிய சக்தியால் இயற்ற முடியும் என்று நினைத்து அதற்கேற்ற முயற்சிகள் நடக்கின்றன. வீட்டுச் சமையல் காரியங்களையும் சூரியனது சக்தியால் செய்யக்கூடிய அடுப்பை எளிய விலையில் அமைப்பதற்கும் முயலுகிறார்கள். முயற்சி அநேகமாக வெற்றிகரமாக முடிந்துவிட்டது என்று சொல்லப்படுகிறது.

வேறு வகையாகவும் சூரிய சக்தியைப் பயன்படுத்தலாம். வெப்பத்தால் நேரிடையாகவே மின்சாரத்தை இயற்றலாம். இதில் சூரிய வெப்பத்தில் நூற்றுக்கு இரண்டு பகுதிதான் பயன்படும் என்று கணக்கிடுகிறார்கள்.

தாவரங்கள் சூரியசக்தியை அற்புதமாகப் பயன்படுத்துகின்றன என்பது யாவரும் அறிந்த விஷயம். அதைப்போல், செயற்கையாக வேறு ஏதாவது செய்ய முடியுமா என்றும் முயன்று வருகிறார்கள். தண்ணீரை ஹைடிரஜன் பெராக்ஸைடாக மாற்றுவதுபோன்ற வேறு வகையான முயற்சி ஒன்று அமெரிக்காவில் ஹைட் (Heidt) என்பவரின் தலைமையின்கீழ் நடந்துவருகிறது. ஏதாவதொரு துறையில் வெற்றி கிடைத்தாலும் அதனால் விளையும் லாபம் மிகப் பெரியதாயிருக்கும்.

இப்படிப் பல நாடுகளிலும் முயற்சிகள் தனித்தனியே நடந்து வருகின்றன. இவற்றைப் பற்றிய உண்மை என்ன என்று பலரும் உறுதியாகத் தெரிந்துகொள்வதற்காக அமெரிக்காவில் தேசிய பௌதிகச் சோதனைச் சாலையின் (National Physical Laboratory) தலைவரான புல்லார்டு (Bullard) என்பவரின் தலைமையில் ஒரு கமிட்டி ஏற்படுத்தப்பட்டது. அது பல விஷயங்களையும் சீர்தூக்கி ஆராய்ந்து ஓர் அறிக்கையை வெளியிட்டிருக்கிறது. பலவகையான புள்ளி விவரங்கள் அதில் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

சூரிய கிரணங்களை முக்கியமாக ஆறு துறைகளில் பயன் படுத்தக் கூடும் என்று அந்த அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. தண்ணீரை வெப்பமுறச் செய்தல் (Water heating), சமைத்தல், Cooking), பண்டங்களைக் குளிரவைத்துப்பாதுகாத்தல் (Refrigeration) எந்திரங்களை இயக்குதலும் மின்சாரத்தை உற்பத்தி செய்தலும் (Mechanical or Electrical Power Production), விறகுப் பொருள்களை இயற்றுதல் (Fuel Making), தண்ணீரைக் காய்ச்சி வடித்தல் (Distillation of Water) என்பவைதாம் அந்தத் துறைகள்.

சூரிய சக்தியைப் பயன்படுத்துவதில் எத்தனையோ சிரமங்கள் இருக்கின்றன. சூரியன் எல்லாக் காலங்களிலும், எல்லா நாடுகளிலும், எல்லா வேளைகளிலும் ஒன்றுபோலப் பிரகாசிப்பதில்லை. சூரிய சக்தி மொத்த அளவில் மிகப் பெரிது என்று கருதக் கூடியதாயிருந்தபோதிலும், அது மிகப் பரந்த இடங்களில் சிதறி வீசப்படுகிறது. அது ஒரே இடத்தில் நிலையாக ஒரே திசையாக உறைப்பதில்லை. ஆகையால், அதைப் பயன்படுத்துவதற்கு வேண்டிய கருவி விலைமிகுந்ததாகிவிடுகிறது — சுண்டைக்காய் கால் பணம் சுமை கூலி முக்கால் பணம் என்பது போல. ஆயினும், எங்கும் விலை இல்லாமல் கிடைக்கும் சக்தியை எப்படியாவது நன்கு பயன் படுத்த வேண்டும் என்று அறிவாளிகள் முயன்று வருகிறார்கள். கோடிக் கணக்காகப் பணச் செலவு செய்து, அறிவின் முன்னணியில் உள்ளோரை ஏவல் கொண்டு, அணுவின் இரகசியத்தை விண்டு, அதிலிருந்து அளப்பரிய சக்தியைப் பெறும் வழியைக் கண்டு பிடித்து விட்டார்கள் அல்லவா? அது போலவே இந்த முயற்சியும் கைகூடும் என்று நாம் எதிர்பார்க்கலாம்.

# திருவள்ளுவர்கால வாழ்க்கை நிலை

வித்துவான், திரு. கு. குமாரஸ்வாமி ஆச்சாரி அவர்கள், M.A. விரிவுரையாளர், தமிழ்க்கல்லூரி, மயிலம்.

(406-ம் பக்கத் தொடர்ச்சி)

## ஆடவர்

மக்கள், ஆண், பெண், பேடி என முத்திறப்படுவர். ஆண்மை யுடையவர் ஆண்மக்கள். பெண்மை-(பெட்குந்தன்மை)-யுடையவர்கள் பெண் மக்கள். ஆண்மை குறைந்து பெண்மை மிகுந்துள்ள ஆண்கள் பேடி எனப்படுவர். "பேடிகை வாளாண்மை போல்" என்பது குறள். ஆண்மையாவது எடுத்த செயலை எத்தகைய இடையூறுகள் வரினும் விடாது முடிக்குந் தன்மையாம். "பேராண்மை என்ப தறுகண்." பிறரையாளும் வன்மையும் ஆண்மையாம்; தன் ஐம்புலன்களையும் ஆளுந் தன்மையும் ஆண்மையாம். பிறன்மனை நோக்காத் தன்மையும் பேராண்மையாம். எனவே ஐம்புலன்களை அடக்கியாளுந் தன்மையே பேராண்மை. அவரது ஏவல்வழி உலகம் நிற்கும். ஆண்மையுடைய வன் ஐம்பொறிகளை யடக்கி யாள்பவன்; பழிபடுவ செய்யான். "சீரி னும் சீரல்ல செய்யாரே சீரொடு பேராண்மை வேண்டு பவர்" என்பது திருக்குறள். ஈண்டுப் "பேராண்மை" எனப்படுவது 'மானம்' என்றும் "எவ்விடத்தும் நிலை குலையாத திண்மையான் உளதாதல் பற்றிப் பேராண்மை எனப்பட்டது" என்றும் கூறும் பரிமேலழகர் உரை சிந்திக்கத்தக்கது. "நாணொடு நல்லாண்மை பண்டுடையோன் இன் றுடையேன் காமுற்றா ரேறும் மடல்," "காமக் கடும்புனல் உய்க்குமே நாணொடு நல்லாண்மை என்னும் புணை" என்னும் குறள்களும் இக் கருத்தையே வலியுறுத்தும். ஆடவர்க்கழகு பெண் விரும்ப ஒழுகு வதேயன்றிப் பெண்ணேவல் செய்வதன்று' என்பது 'வாழ்க்கைத் துணை' 'பெண்வழிச் சேறல்' என்னும் இரு வேறதிகாரங்கள் வகுத் திருப்பதனால் புலனும்.

மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர் (குறு 105). பொருளீட்டும் முயற்சி ஆடவர்க்கே உரியது. 'ஆடூஉ' என்னும் சொல்லே இதனை வலியுறுத்தும். வினையே ஆடவர்க்கு உயிர் (குறு 105). அகப்பொருள் இலக்கணம் 'பொருள் வயிற் பிரிவு' என ஒன்று குறிப்பதும் இதனை வலியுறுத்தும். "திரைகட லோடியும் திரவியம் தேடு" என்பதும் மூத்தையோர் கூறும் நல்லுபதேசமாம். "முந்நீர் வழக்கம் மகடூஉவோ டில்லை" என்பது தொல்காப்பிய மாதலின் ஆடவர் தாம் அம் முயற்சிக் குப் பெரிதும் உரிமை யுடையர் என்பது தெள்ளிதிற் புலனும். "ஈட்டம் இவறி இசைவேண்டா ஆடவர் தோற்றம் நிலக்குப் பொறை" என்னும் குறள் பொருளீட்டுவார்க்கு வேண்டுவதோர் பண்பினை யுணர்த்து கிறது. பொருளீட்டலே போல் புகழும் நாடப்பெறல் வேண்டும். புகழ் பொருளினும் சிறந்தது. அப்புகழ் ஆடவர்க்குரித்தெனக் குறிக்கிறது இக் குறள். புகழை நாடுதல் மகளிர்க்கு உரித்தன்றோ எனின் அவர் கட்கும் உரித்துஎன்பது உண்மையே; "புகழ்புரிந்தில்லிலோர்க்கில்லை" என்னும் குறள் இவ் வுண்மையை விளக்கும். மகளிரை வாழ்க்கைத் துணை எனக் குறிப்பதனுல் குடும்ப வாழ்க்கையில் அவர்களது பங் கினை நாம் உன்னுதல் வேண்டும். பொருளீட்டுவார் ஆடவரே என்பதை இக் குறளும் வலியுறுத்தும்.

மக்களது மேனியில் இயற்கை மணம் உண்டு. ஆடவர் மேனி முல்லை மலரின் மணமுடையது. "மணந்தனென் மன்னெடுந் தோளே இன்று முல்லை முகைநா றும்மே" (குறு. 193) என்பது அரிசில் கிழார் வாக்கு. மகளிர் மேனியிலும் இயற்கை மணம் உண்டு என்பதைக் "கொங்குதேர் வாழ்க்கை" என்னும் குறுந்தொகைச் செய்யுள் குறிக் கும். "பந்தினை யினையவர் பயிலிடம் மயிலூர், கந்தனை யனையவர் கலை தெரி கழகம், சந்தன வனமல சண்பக வனமாம், நந்தனவனமல நறை விரி புறவம்" என்னும் கம்பர் பாட்டும் இதனை வலியுறுத்தும். "மூறி மேனி முத்த முறுவல் வெறிநாற்றம், வேலுண்கண் வேய்த்தோ ளவட்கு" என்னும் குறளும் மகளிர்க்கு இயல்பாய மணம்உண்டெனக் கூறுவது காண்க.

ஒருவனுக்கு ஒருத்தி என்பதுதான் வாழ்க்கை மரபு. எனினும் ஆடவர் பலமகளிரை மணந்து வாழ்வதுண்டு, வாழ்ந்ததுண்டு. முதல் மனைவி தலைவி அல்லது கிழத்தி எனச் சிறப்பாகக் குறிக்கப்படுவாள். ஏனையவர், 'பின்முறை வதுவைப் பெண்டு' எனக் குறிக்கப்படுவர். இவர்கள் முதல் மனைவி போலவே தலைவனது சொத்திற்கு உரிமை யுடையவர். ஆடவர் காமநுகர்ச்சிக்கெனப் பரத்தையரை யடைவ துண்டு. அவர்களுள்ளும் தமக்கே யுரிமையுடையவராக மணந்து கொள்ளப்படுபவர் காமக்கிழத்தியர் எனப்படுவர்.

ஏனவே, ஆடவர் ஐம்புலனடக்கி, பழிபடுவன செய்யாது மானத் தோடு பொருளீட்டி, வாழ்க்கைத் துணையொடு புகழீட்டி வாழ்ந்து வந்தனர் என்பது பெற்றும்.

மனைவியை யிழந்த ஆடவர் தவநெறியில் நிற்பர்; வேறு மகளிரை மணந்து வாழ்வதுமுண்டு. அவர் தவநெறியில் நிற்பதைத் தபுதார நிலை என்பர் இலக்கணநூலார். மனைவியை விலக்குவதனைப்பழித்தனர்; இழித்தனர். மனைவியைத் துறந்தான் நிலையைக் குற்றிசை என்றும் தன்னைத் துறந்தானை நங்கை முன்னின்று பழிதூற்றுதலைக் குறுங் கலி என்றும் இலக்கண நூலார் கூறுவதே அதற்குத் தக்க சான்றும்.

## மகளிர்

மகளிர் பிறரை வாழவைப்பவர். ஆதலின், வாழ்க்கைத் துணை என வள்ளுவரால் சிறப்பிக்கப்படுகிறார்கள். 'இல்லாண் முல்லை' என் னும் புறத்திணைத் துறையும் (பு. வெ) இதனை வலியுறுத்தும். "தற் காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற சொற்காத்துச் சோர் விலாள் பெண்." பெண்களுக்குக் கற்புச் சிறந்தது. கற்புடைய மகளிர் 'ஒருமை மகளிர்' எனக் குறிக்கிறார் வள்ளுவர். "ஒருமை மகளிரே போலப் பெருமையும் தன்னைத்தான் கொண்டொழுகி னுண்டு' என அவர்களைச் சிறப்பிக்கின்றார். பெருமை வேண்டும் ஆடவர் இம்மகளிர் போல் ஒழுகல் வேண்டும் என மகளிரைச் சிறப்பிக்கும் நிலை உன்னி

யுன்னிப் போற்றற்குரியது. ஒருமை மனத்தாற்றான் பெருமை யுண்டாம் என்கின்றார் வள்ளுவர். ஒருமையாவது நிறையின் வழுவாமல் தம்மைத் தாம் காத்துக்கொண் டொழுகலாம். "கற்புண்டாதல் தோன்ற நின்றமையின் உம்மை எச்சவும்மை. ஒழுகுதல் மனமொழி மெய்களை யொடுக்கி ஒப்புரவு முதலிய செய்து போதல்" எனப் பரிமேலழகர் குறிப்பது நோக்கத்தக்கது. கற்புடைய மகளிர் ஒருமை மகளிர் எனப்படுதலால், இருமை மகளிரும் உண்டு என்பது பெறப்படும். அவர்களை இருமனப் பெண்டிர் என்பர் வள்ளுவர். இருமனப் பெண்டிரைப் பொருட்பெண்டிர், மாயமகளிர் எனவும் குறிக்கின்றார். வரைவின் மகளிர் இத்தன்மையரே.

> "பெண்ணெனப் படுவ கேண்மோ பீடில பிறப்பு நோக்கா
> உண்ணிறை யுடைய வல்ல ஓராயிர மனத்த வாகும்
> எண்ணிப்பத் தங்கை யிட்டால் இந்திரன் மகளு மாங்கே
> வெண்ணெய்க்குன் றெரியுற் றாற்போல் மெலிந்தபின் நிற்கு மன்றே"

என்னும் சிந்தாமணிச் செய்யுளும், "இனம்போன்று இனமல்லார் கேண்மை மகளிர் மனம்போல மாறு படும்" என்னும் குறளும் அன்பு சென்றவழி மனம் செல்லுமாதலின் எம் மகளிர்க்கும் மனம் மாறுபடும் எனப் பொதுப்படக் குறிக்குமாயினும் இந்நிலை-மனம் மாறுபடும் நிலை-இருமனப் பெண்டிர்க்கேயாம் என்பது உய்த்துணர வேண்டுவதொன்று, நிறையொடு வாழும் மகளிரும் உண்மையான்.

மகளிர் தம் குடும்பநிலை யுணர்ந்து, அதற்குத்தக வாழ்க்கை நடத்துதல் வேண்டும். தம் கணவரது வருவாய்க்குத்தகச் செலவுசெய்தல் வேண்டும். தம் கணவர்க்குப் பொருளும் புகழும் புண்ணியமும் பொருந்துதற்குக் காரணமாவர் இத்தகைய மகளிர்களே. கணவனுக்குக் கவலையைத் தீர்த்துக் களிப்பை நல்குவர். மனைத்தக்க மாண்புடையவளும் கணவனது வளத்தக்காளும் ஆகியவளே வாழ்க்கைத் துணை யாதற்குரியவள். வளத்தக்காளாயினும் மாண்பிலளாயின் இல்வாழ்க்கை மாண்புறாது. மனைத்தக்க மாண்பு நற்குணங்களும் நற்

செய்கைகளுமாம். "நற்குணங்களாவன துறந்தார்ப் பேணலும், விருந்தயர்தலும், வறியார்மாட் டருளுடைமையும் முதலாயின. நற்செய்கைகளாவன வாழ்க்கைக்கு வேண்டும் பொருள்கள் அறிந்து கடைப்பிடித்தலும், அட்டிற் றொழில் வன்மையும், ஒப்புரவு செய்தலும் முதலாயின" என்பர் பரிமேலழகர். இத்தகைய மாண்பினளும் வளத்தக்காளு மாயினும் குடும்பம் சிறக்கும் என்பது உறுதியே. எனினும் இவ் விரண்டோடு கற்பும் இருத்தல் வேண்டும். "பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பெனும் திண்மையுண் டாகப் பெறின்." என்று வள்ளுவர் கூறுகின்றார். "பெறின்" என்னும் வினையெச்சப் பொருள் சிந்திக்கத்தக்கது. மனைத்தக்க மாண்பினளும் வளத்தக்காளுமாகிய வழியும் கற்பில்லாவிடில் பயனில்லை. அவை கற்பொடு கூடின் சிறந்த பயனுண்டாம். அத்தகையவளே கணவனுக்குப் பொருளும் புகழும் புண்ணியமும் பொருந்துதற்குக் காரணமாவாள். கற்பிலாதாரும் மனைத்தக்க மாண்பொடு வாழ்வர், வாழ்ந்தனர் என்பது "நலத்தின்கண் நாரின்மை தோன்றின் அவனைக் குலத்தின்க ணையப்படும்." என்னும் குறளால் வலியுறும். "நலத்தின்கண்" என்பதற்குக் "குலநல முடையவனுய் வருகின்றவன் கண்ணே" எனவும், 'தோன்றின்' என்பது "தோன்றுமை விளக்கி நின்றது" எனவும், "ஐயப்பட லென்பது பாடமாயின் 'ஐயப்படுக' என விதியாக்கி யுரைக்க" எனவும் பரிமேலழகர் கூறுவது, நற்குல மகளிரிடத்தும் இத் தவறுண்டாம் என்பதை யுணர்த்தும். மனைத்தக்க மாண்பொடு வாழ்தல் கற்பிற்குரிய இலக்கணத்துள் ஒன்று என்பதை நோக்கினும் இக் கருத்துப் புலனாம். இதனுற்றுன், "தெய்வம் தொழா அள் கொழுநற் றொழுதெழுவாள் பெய்யெனப் பெய்யும் மழை" எனக் கற்பினிலக்கணம் வகுக்கும் வள்ளுவனார் "தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற சொற்காத்துச் சோர்விலாள் பெண்" என அதனை விரித்தோதுகின்றார். நிறையால் தற்காத்துக் கொள்வதே கற்பு எனப்படுமாயினும் அந் நிறை நிலைத்து நிற்கத் தற்கொண்டான் பேணலும் தகை சான்ற சொற்காத்தலும் இன்றியமையாத் துணையாம். நிறையால் தற்காத்தலே கற்

பெனச் சிறப்பித்துச் சொல்லப்படுவது என்பதனை "நிறை காக்கும் காப்பே தலை" என்பது வலியுறுத்துகிறது. பரிமேலழகர் "தன்மாட்டுப் புகழாவது வாழுமூர் கற்பாற் றன்னைப் புகழ்வது" எனத் "தற்காத்து" என்னும் குறளில் விளக்கம் கூறுவதும் இதனை வலியுறுத்தும். "நிறை யென்னும் நாணுத்தாழ் வீழ்த்த கதவு" என்பதும் இதனையே வலியுறுத்தும். "செவ்வன், இறை காக்கு மிவ்வுலகி னிற்பிறந்த நல்லாள், நிறைகாப்ப வைகும் நிறை", "வைகலும், அக்குழைக்கீரை யடகு மிசையினும், எங்கணவன் நல்க வினிது" 'எங்காதலன் நல்க வருவிருந்தோம்பும் வளம்' என்னும் புறப்பொருள் வெண்பாமாலைத் தொடர்கள் மேற்கருத்தையே வலியுறுத்துவன காண்க. "எழுதுங்கால் கோல்காணுக் கண்ணேபோல் கொண்கன் பழிகாணேன் கண்டவிடத்து" "பசப்பெனப் பேர்பெறுதல் நன்றே நயப்பித்தார் நல்காமை தூற்ருரெனின்," "அளித்தஞ்சல் என்றவர் நீப்பிற் றெளித்தசொற் றேறியார்க் குண்டோ தவறு," "செற்ருரெனக்கை விடலுண்டோ நெஞ்சேயா முற்ரூ ருறுஅதவர்" என்னும் குறள்கள் நிறையின் வன்மையையும் பெருமையையும் புலப்படுத்துவதோடு திருமண விலக்கு (Divorce) அக்காலத்து விரும்பப்படாததொன்று என்பதையும் புலப்படுத்தல் காண்க. கற்புடையவளே கணவனுக்குப் பெரும் புகழளிக்கும் மனைவி யாவாள் என்பது "புகழ் புரிந்த இல்" என்னும் குறளடியால் தேற்றமாம். "பசக்கமற் பட்டாங்கென் மேனி நயப்பித்தார் நன்னிலைய ராவ ரெனின்" "இம்மைப் பிறப்பிற் பிரியல மென்றேனக் கண்ணிறை நீர்கொண் டனள்" என்னும் குறள்கள் ஒருத்திக்கு ஒருவனே கணவன் என்னும் கொள்கையை நிலைநிறுத்துகின்றன.

மனைவி விருந்தோம்பலில் விருப்புடைய ளாதல் வேண்டும். "நீணெடும் பந்தர் ஊண்முறை யூட்டும் இற்பொலி மகடூஉப் போலச் சிற்சில வரிசையி னளிக்கவும் வல்லன்" புறம் 331) என்பதனுல் மனைவி வரும் விருந்தினர்களை அவரவர் தகுதி யறிந்து ஓம்புவாள் என்பது புலனும். "கடனீரட் டுண்ணு மிடுக்கட் பொழுதும் கடனீ ரறவுண்

னும் கேளிர் வரினும்-கடனீர்மை கையாறுக் கொள்ளும் மடமொழி மாதர் மனைமாட்சி யாள்" (நாலடி 382) என்பதனால் தன் நலம் கருதாது வருவிருந் தோம்புவதே நோக்க மாதல் வேண்டும் என்பது புலனாம். மகளிர் இழை வளை முதலிய கலனணிதலினும் மலரணிதலினும் பெரு விருப்புடையர்.

மகளிர் மணம்புரிந்துகொண்டுதான் வாழவேண்டும். மணமில்லா வாழ்க்கை அவர்கட்குக் கூடாது என்பது பண்டையோர் கொள்கை. "அற்றார்க் கொன் றாற்றாதான் செல்வம் மிகுநலம் பெற்றாள் தமியள் மூத்தற்று" என்னும் குறள் இதனை வலியுறுத்தும். இவ் வளம் பெறு மகளிர் மகப்பேற்றொடு வாழ்தல் வேண்டும். நன்கலம் நன்மக்கட் பேறும். "சந்ததிக் கழகு வந்திசெய் யாமை" என்பதோர் அமுதமொழி. மக்கட் பேற்றிற் காகவே மணம்புணர்தல் என்பது பெரியோர் கூறும் நல்லுரையாம். அக் கொள்கையே காதற் காமத்தை வளர்க்கும். இன்றேல் காமக் காமத்தால் கவினழிந்து நிலையழிந்து இன்னலுற நேரும்.

மகளிர் கற்புநெறியினின்றும் தவறாதிருக்க நிறையுடையாதல் வேண்டும். "நிறையென்னும் நாணுத்தாழ் வீழ்த்த கதவு" என வள்ளுவனார் குறிப்பது நோக்கத் தக்கது. நிறை வழுவாதிருக்கத் துணை செய்வன நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு ஆகியனவாம். பரிமேலழகர் "நாண்: இழிவாயின செய்தற்கண் விலக்குவது" (குறள் 1123), "பரத்தையர் தோய்ந்த மார்பைத் தோய்தற்கு நாணுதல்" (குறள் 1257), "எஞ்ஞான்றும் கூடிபொழுகினும் அஞ்ஞான்று கண்டார் போன்றொடுங்குதல்" (குறள் 1297), "மடமை: கண்டவழி நினைந்து காணாதவழி மறக்கும் தவற்றைக் காணாவழி நினைந்து கண்டவழி மறத்தல்" (குறள் 1297) எனக் கூறுவர். தனது நிறைக்குக் கேடுவரும் என உணரும் காலத்து இழிவுறும் என நாணி, ஒன்றும் உணராதார் போல வாளாவிருந்து, இழிவுதரும் கேட்டிற் கஞ்சிப் பிற ஆடவர் மெய்ப்படுதலை வெறுத்து நிற்றல் வேண்டும். ஆதலின் இவை நான்கும் மகளிர் தற்காக்கும் படையாம்.

"நாற்குணமும் நாற்படையா வைம்புலனும் நல்லமைச்சா
ஆர்க்குஞ் சிலம்பே யணிமுரசா—வேற்படையும்
வாளுமே கண்ணா வதன மதிக்குடைக்கீழ்
ஆளுமே பெண்மை யரசு"

என்னும் நளவெண்பாப் பாட்டு உன்னுதற்குரியது. "அச்சமும் நாணும் மடனும் முந்துறுத்த நிச்சமும் பெண்பாற் குரிய என்ப" என்னும் தொல்காப்பியச் சூத்திரமும் இதனை வலியுறுத்தும். மகளிர் நல்லறிவுடையவர் என்பதைச், "செறிவும் நிறையும் செம்மையும் செப்பும் அறிவும் அருமையும் பெண்பா லான" என்னும் தொல்காப்பியச் சூத்திரம் இயம்புதல் காண்க.

கணவனை யிழந்த மகளிர்க்கு அவன் இறந்த செய்தி கேட்டதுமே உயிர் நீங்கும். அவ்வாறு உயிர் நீங்கா மகளிர் அக் கணவனுடலொடு தீயில் புகுவர். அங்ஙனம் மாயாது கைம்பெண்ணாகிக் கணவனை நினைந்து தவநெறியில் நிற்பினும் நிற்பர். மூதானந்தம், தலைப்பெயனிலை, முலையும் முகனும் சேர்த்திக் கொண்டோன் தலையொடு முடிந்த நிலை, கணவனொடு முடிந்த படர்ச்சி, பாலைநிலை, முதுமாலை, தாபதநிலை என்னும் புறத்திணைத் துறைகள் இவ் வுண்மையை உணர்த்துவனவாம். "செல்லாமை யுண்டேல் எனக்குரை மற்றுநின் வல்வரவு வாழ்வார்க் குரை" என்னும் குறள் இதனை வலியுறுத்தும்.

(தொடரும்)

# மதிப்புரை

பாதசங்கிரகம்:—[நூலாசிரியர்: அறம்வளர்த்தான் என்பார். பதிப்பாசிரியர், வித்துவான் திரு, க. வெள்ளைவாரணனுர் அவர்கள். விலை ரூ. 4. விலாசம்: 'The Registrar, Annamalai University, Annamalai Nagar P. O,]

இஃது அண்ணமலைப் பல்கலைக் கழகத்து இசைத் தமிழ் வெளியீடு 20. பரதம் நாடகத் தமிழாயினும், இயல் இசைத் தமிழ்க் கூறுபாடுகளும் ஒரு நெறிப்பாடின்றி இதில் விரவியுள்ளன. இதனுள் பலவேறு பாக்கள் கலந்திருப்பது, அவை பலவேறு ஆசிரியர் இயற்றியனவோ என ஐயமாக்குகின்றது. நாடகம், தாளம் என்பவற்றின் அரிய இலக்கணங்கள் சில இத்தொகுப்பு நூலால் நன்கு அறியலாவன. முழுதும் வடநூல் வழக்குப் பற்றி ஒழுகும் இது, அம்மொழியோடு இரண்டற இயைந்தே, முன்னுளில் தமிழிசை நாடகக் கலைகள் தழைத்து வளர்ந்தன எனற்குச் சிறிய எடுத்துக்காட்டு என்னலாம்.

அரைகுறையாகி, நிரம்பாத பழையவுரை யொன்று இதன் பாக்களின் பொருளைத் தெளிய வுணர்த்துகின்றது. அதன்மேலும், பதிப்பாசிரியரவர்கள் பழைய நூல் உரை மேற்கோள்களை யெல்லாம் அரிதின் ஆராய்ந்து தேடித் தொகுத்து அடிக்குறிப்பாக உதவி யுள்ளார்கள். இக் குறிப்புரை மிகப் பயன்தரு மென்பது இதனை ஒருகால் பயில்வார்க்கும் இனிது விளங்கும். மிகவும் நுனித்துணரவுரிய சில அரிய கருத்துக்களும் இதில் காணப் பெறுவது, அவர்களின் ஆய்வுத் திறனைப் புலப்படுத்துகின்றது.

ஆயினும், மூலத்திலும் உரையினும் சில பல வழுக்கள் இன்னும் திருத்தம் பெறல் இன்றியமையாததாம். பக்கம் 17-ல்

'செய்யவிரு கால்கூட்டிச் சேர்ந்தழக மசையாமல்'

என அச்சிட்டிருக்கும் வெண்பாவடியை,

'செய்யவிரு கால்கூட்டிச் சேர்ந்த ழக்மசையா(து)

என்று திருத்தியிருந்தால்சீரும் தளையும் சிதையாது சிறக்கும்.

இங்ஙனமே பக்கம் 20-ல்,

'புட்பாஞ்சலி வகுப்பு புனிதர் தில்லை மன்றுளினில்'

என்றிருப்பதை,

'புட்பாஞ் சலிவகுப் புப்புனிதர் தில்லைமன்றில்'

என வகையுளி பிரித்துப் படிக்கச் சீரும் தளையும் சிதையாதாம். இவை போல்வன யாரும் எளிதாகத் திருத்த இயலும்.

இனி, பக்கம் 18-ல் 'நாட்டிய தசப் பிராணன்' என்ற தலைப்பின் கீழ் வெண்பாவின் முதல் மூன்றடிகள்,

'மெய்யே முகங்கண்கள் காலுடனே பண்புதொழிற்
கையே புருவங் குறிப்பறிதல்—செயலென்றா
அவைவிகற் பத்தி னலாட லென்றார்'

என ஏட்டிலிருந்தவாறே பாட்டுப் பிழையாகப் பதிக்கப்பட்டுள்ளன. இதன் பழைய வுரை தலைப்பிலுள்ள 'தசப்பிராணன்' என்றதற்கேற்ப, 'மெய், முகம், கண்கள், கால், பண்பு, தொழில், கை, புருவம், குறிப்பறிதல், பண்; இவை பத்து விகற்பத்தாலும் ஆடப்படும்' என்று மிகத் தெளிவாக இங்கு விளக்கம் தருகின்றது. எனவே தலைப்பிலும் உரையிலும் குறிப்பிட்ட பத்துப் பிராணனும் குறையாமல் இவ் வெண்பாப் பகுதிக்கு உயிரூட்ட வேண்டும். அங்ஙனம் செய்யும்போது,

'மெய்யே முகங்கண்கள் காலுடனே பண்புதொழில்
கையே புருவங் குறிப்பறிதல்—செய்பண்
அவைவிகற் பம்பத்தி னலாட லென்றார்'

எனத் திருத்தமுற்றுப் பொருளொடு பொருந்திச் சிறந்து காட்டும்.

இன்னும் பக்கம் 58-ல் பழைய வுரையின்கண் கடைப்பட்டது என்னும் பொருளில் வழங்கும் 'அதமம்' என்னும் வடசொல் 'அதன்மம்' என்று பிழைபட இரண்டிடத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. இவை போல்வன இன்னும் உள. அவை யாவும் அடுத்த பதிப்பில் திருந்துதல் வேண்டும். நிற்க.

இவ் வெளியீடு போன்ற உத்தமப்பணிகளால் முத்தமிழ் வளர்க்கும் பெருமை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்குச் சிறப்பாக வுரியது. அது நீடு வாழத் தில்லைச் சிவபிரான் திருநோக்கு அருள்க.

# அநுதாபக் குறிப்பு

இலங்கை-தெல்லிப்பழை, மாவிட்டபுரம் பண்டிதமணி திரு. க. சு நவநீதகிருஷ்ண பாரதியாரவர்கள் சென்ற 22—12—54 ல் இவ்வுலகவாழ்வு நீத்து உயர்நிலையுலகம் எய்தினர். அவரது பெரும் பிரிவால் பரிவுற்ற தமிழினத்தவர் தனித்துறுதுயரில் அழுந்தினர். சிறப்பாக அவர்கள் செல்வக் குமாரர்கள், அருமை மருகர் ஸ்ரீ பூர்ணனந்தர் முதலிய கிளைஞர்களுக்கு அனைவரது அநுதாபமும் உரியதாகும்.

பாரதியாரவர்கள் இம் மதுரைத்தமிழ்ச்சங்கத்துப் பழைய மாணவரில் ஒருவரெனப் பாராட்டற்குரியவர். தம் ஆயுளிறுதிவரை இச்சங்கத்தின் உறுப்பினராய் உதவியவர். இச் செந்தமிழில் எத்துணையோபல கட்டுரைகள் வெளியிட்டுச் சிறந்த பணி புரிந்தவர். சிலகாலம் இச் சங்கத் தனித்தமிழ்த் தேர்வுகளின் பரீக்ஷகராகவும் விளங்கினவர்.

இவர், வடமொழியை வெறுக்கும் கொள்கையில் சாராத, தூய தமிழார்வம் மிகப்படைத்தவர். 'மாவைக் கவுணியன் வெண்ணெய்க் கண்ணனார்' எனவும் இவர் தமக்கு மறுபெயர் புனைந்து கொண்டார்; சங்கத் தொகைச் செய்யுளே போன்ற உயரிய தனித் தமிழ்ப் பாக்களாக உலகியல் விளக்கம் என ஒரு நூலினை இயற்றினர். மற்றும் இவர் செய்தவை, வெளி வந்தனவும் வெளிவராதனவும், எத்துணையோ பல வுள. இறுதியாக இவர் எழுதி முடித்த 'திருவாசக ஆராய்ச்சிப் பேருரை' இவருக்குத் தமிழன்னை அமைத்துத் தந்த நினைவுச் சின்னம்போல நிலவும் என்னலாம்.

இப் பெருந்தகையாளரின் ஆன்மா இறைவன் திருவடியிற் கலந்து இன்புறுவதாகுக.

# மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

## I. சங்கப்பிரசுரம்.

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| 4. | வைத்தியசாரசங்கிரகம் ... ... ... | 5 | 0 | 0 |
| 5. | பன்னூற்றிரட்டு ... ... ... | 3 | 0 | 0 |
| 8. | தமிழ்ச்சொல்லகராதி மூன்றும்பாகம் ... ... | 5 | 0 | 0 |
| 10. | தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை) ... ... | 1 | 12 | 0 |
| 11. | திருவருணைக்கலம்பகம் ... ... ... | 0 | 6 | 0 |
| 13. | கலைசைச்சிலேடைவெண்பா ... ... ... | 0 | 6 | 0 |
| 15. | திருவாரூர் நான்மணிமாலை ... ... ... | 0 | 4 | 0 |
| 16. | ஸ்ரீகிருஷ்ணசரித்திரவிமர்சம் ... ... | 1 | 4 | 0 |
| 17. | பன்னூற்றிரட்டு (செலக்ஷன்) ... ... | 0 | 4 | 0 |

## II. செந்தமிழ்ப்பிரசுரம்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | ஐந்திணையைம்பது (உரையுடன்) ... ... | 0 | 4 | 0 |
| [illegible] | கணூல் (5) இனியதுநாற்பது (உரை) ... ... | 0 | 3 | 0 |
| 4. | புலவராற்றுப்படை ... ... ... | 0 | 3 | 0 |
| 7. | திருநூற்றந்தாதி (உரையுடன்) ... ... | 0 | 6 | 0 |
| 8. | திணைமாலைநூற்றைம்பது (உரையுடன்) ... ... | 0 | 8 | 0 |
| 9. | அநுமானவிளக்கம் ... .. ... | 0 | 10 | 0 |
| 10. | அட்டாங்கயோகக்குறள் ... ... ... | 0 | 2 | 0 |
| 12. | பன்னிருபாட்டியல் ... ... ... | 0 | 12 | 0 |
| 13. | நான்மணிக்கடிகை (பழைய உரை) ... ... | 0 | 4 | 0 |
| 14. | முத்தொள்ளாயிரச்செய்யுட்கள் ... ... | 0 | 3 | 0 |
| 16. | திருவாரூருலா ... ... ... ... | 0 | 8 | 0 |
| 17. | சுகசந்தர்சனதீபிகை ... ... ... | 0 | 12 | 0 |
| 18. | இயற்கைப்பொருட்பாடம் ... ... ... | 0 | 4 | 0 |
| 19. | தேவையுலா ... ... ... ... | 0 | 3 | 0 |
| 21. | சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்) ... ... | 0 | 8 | 0 |
| 22. | திருக்கலம்பகமூலமும் உரையும் ... ... | 1 | 0 | 0 |
| 23. | விக்கிரமசோழனுலா ... ... ... | 0 | 8 | 0 |
| 24. | குருமொழிவினாவிடை ... ... ... | 0 | 1 | [illegible] |
| 25. | கேசவப்பெருமாள் இரட்டைமணிமாலை ... ... | 0 | 2 | |
| 26. | திருத்தணிகைத்திருவிருத்தம் ... ... | 0 | 1 | |
| 27. | மதுரைத்திருப்பணிமாலை ... ... ... | 0 | 8 | |
| 30. | ஞானமிர்தக்கட்டளை ... ... ... | 0 | 3 | |
| 32. | மனீஷாபஞ்சகம் ... ... ... | 0 | 8 | |
| 36. | உவமானசங்கிரகம் ... ... ... | 0 | 1 | |
| 37. | மாறனலங்காரம் மூலமும் உரையும் ... ... | 4 | 8 | |
| 38. | திருப்புல்லாணிமாலை ... ... ... | 0 | [illegible] | |

| | | | | |
|---|---|---|---|---|
| 40. | திருமாலிருஞ்சோலைமலை அழகர்பிள்ளைத்தமிழ் ... | 0 | 8 | 0 |
| 41. | பொருட்டொகைநிகண்டு ... ... ... | 0 | 6 | 0 |
| 42. | அகராதிநிகண்டு ... ... ... | 0 | 12 | 0 |
| 43. | மேகவிடுதூது ... ... ... | 0 | 2 | 0 |
| 44. | திருக்குற்றாலமாலை ... ... ... | 0 | 2 | 0 |
| 45. | தண்டலையார்சதகம் ... ... ... | 0 | 4 | 0 |
| 46. | இராமோதந்தம் ... ... ... | 0 | 8 | 0 |
| 47. | பழமொழிமூலமும் பழைய உரையும் (2-வது 100) ... | 1 | 0 | 0 |
| 48. | சேதுநாடும் தமிழும் ... ... ... | 0 | 6 | 0 |
| 52. | கூடற்புராணம் ... ... ... | 0 | 10 | 0 |
| 53. | திருவள்ளுவர் (ஆங்கிலம்) ... ... ... | 0 | 6 | 0 |
| 54. | அரும்பொருள்விளக்கநிகண்டு... ... ... | 1 | 4 | 0 |
| 55. | மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும் ... | 0 | 12 | 0 |
| 56. | பாப்பாவினம் ... ... ... | 0 | 10 | 0 |
| 57. | மதுரைமும்மணிக்கோவை ... ... ... | 0 | 5 | 0 |
| 58. | பழனிப் பிள்ளைத்தமிழ் ... ... ... | 0 | 3 | 0 |
| 59. | கடம்பர்கோயில் உலா ... ... ... | 0 | 6 | 0 |
| 60. | சங்கரநயினார்கோயில் அந்தாதி ... ... | 0 | 6 | 0 |
| 61. | கலைசைக்கோவை ... ... ... | 0 | 12 | 0 |
| 62. | பெருந்தொகை ... ... ... | 5 | 0 | 0 |
| 63. | சூடிக்கொடுத்தநாய்ச்சியார்தோத்திரப்பாமாலை ... | 0 | 5 | 0 |
| 64. | சிராமலைக்கோவை ... ... ... | 0 | 12 | 0 |
| 65. | மத்யமவியாயோகம் ... ... ... | 0 | 2 | 0 |
| 67. | அமிர்தரஞ்ஜனி ... ... ... | 0 | 2 | 0 |
| 69. | பொன்வண்ணத்தந்தாதி மூலமும் உரையும் ... | 0 | 8 | 0 |
| 70. | திருச் சிறுபுலியூருலா ... ... ... | 0 | 12 | 0 |
| 71. | திணைத்தலைவர் நினைவுமலர் ... ... ... | 0 | 10 | 0 |

குறிப்பு:-1. கைவசம் இல்லாத சங்கப்பிரசுரங்களும் செந்தமிழ்ப்பிரசுரங்களும் இதில் குறிக்கப்படவில்லை. மறுபடி அச்சிட்டு வெளியானதும் இப்பட்டியலில் சேர்க்கப்படும்.

2. சங்கத்தினின்று மாதம் ஒருமுறை அரிய பெரிய விஷயங்களைக் கொண்டுவெளியாகிவரும் இச்“ செந்தமிழ் ”ப்பத்திரிகைக்கு வருஷச்சந்தா ரூ 4. தனிப்பிரதியின் கிரயம் அணா 8. வெளிநாடுகளுக்கு வருஷச்சந்தா ரூ 4–8–0. இதுவரை 50 தொகுதிகள் பூர்த்தியாயிருக்கின்றன. இவற்றுள் 1, 2, 3, 6, 7, 8, 9, 10, 14, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. 12 மாதப்பகுதிகள் உள்ள பைண்டு செய்யாத தொகுதி 1-க்கு ரூ 4—0—0 வீதம் விற்கப்பெறும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

3. சங்கப்பதிப்புப்புத்தகங்களை ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு ரூபா ஒன்றுக்கு அரையணா வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

S. சிவஸ்வாமி, மானேஜர்.